[29th August 1961

(*b*) & (*c*) The compensation amount has not yet been fixed.

(*d*) Yes.

(*e*) This farm was requisitioned on 18th March 1960. From the date of taking possession of the land up to 31st December 1960 various crops were raised.

SRI M. KALYANASUNDARAM : வருஷம் ஒன்றுக்கு அந்த நிலச்சுவான்தாருக்கு எவ்வளவு தொகை கொடுக்க வேண்டுமென்று முடிவு செய்வதில் தாமதமாக வேண்டிய காரணமென்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : எவ்வளவு கொடுக்க வேண்டும் என்பதை பரிசீலனை செய்ய வேண்டியிருக்கிறது. ரெவின்யூ அதிகாரிகளைக் கேட்க வேண்டியிருக்கிறது. இதற்கெல்லாம் கொஞ்சம் அவகாசம் தேவைப்படுகிறது.

SRI M. KALYANASUNDARAM : இந்த நிலத்தை பண்ணைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று எந்த நிபுணர்கள் பார்த்து லாயக்கான இடம் என்று அபிப்பிராயம் கூறினார்கள் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஆராய்ச்சி நிலையத்திலே இந்த நிலத்தின் மண் பரிசோதனை செய்யப்பட்டது. அஸிஸ்டெண்ட் டைரெக்டர் ஆப் அக்ரிகல்ச்சர் இந்த ஆராய்ச்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறார். பரிசோதனையின் முடிவுகளை ஆராய்ந்துப் பார்த்து இந்த நிலம் தகுதியானது என்று சொல்லி, அதன் பேரில் எடுக்கப்பட்டது. நான் அளித்த விடையிலே ஒன்று தெரிவித்தேன். இந்த நிலத்தின் சொந்தக்காரர்களுடைய உறவினர் விவசாய இலாக்காவிலே இருக்கிறாரா என்ற கேள்விக்கு "ஆம்" என்று பதில் சொன்னேன். அந்த உறவினர் தஞ்சை ஜில்லாவிலே ஒரு பெரிய அதிகாரி. ஆனால் அவருக்கும் இந்த நிலத்தை குத்தகைக்கு எடுப்பதற்கும் ஒருவிதமான சம்பந்தமும் இல்லை.

Poonthope Forests

* 1490-H *Q.*—SRI V. ARUNACHALA THEVAR : Will the Hon. the Minister for Home be pleased to state :

the purpose for which the Poonthope of Mirattunilai, Tirumayam taluk, Pudukkottai Division, Tiruchirappalli District has been put to use now?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The Poonthope forest in Mirattunilai village otherwise called as Poonampatti Mango Tope will be leased out under the terms governing the lease of Minor Forest Products for collection of usufructs. The old building in the Poonthope has since been repaired and is being used as a Rest House by the Forest Department.

SRI V. ARUNACHALA THEVAR : புதுக்கோட்டையிலே தர்பார் காலத்திலே கோழி வளர்த்தல், தேனீ வளர்த்தல் ஆகியவற்றுக்கு பண்ணைகள் வைத்திருந்தார்களே, அதேபோல அது ஒரு

29th August 1961]

பிளாக் ஏரியாவாக இருப்பதினுலே கோழி வளர்ப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா? டிகாட்டிலாக்காவைப் பொறுத்த வரையில் அங்கே நல்ல வகை மரங்களை, நர்ஸரி முதலியவைகளை வைத்து அந்தக் காட்டை வளர்ப்பதற்கு முன் வருவார்களா?

THE HON. SRI M. BHAKTHAVATSALAM : தர்பார் காலத்திலே என்னென்ன இருந்ததோ அதையே நாமும் வைத்துக்கொள்ள வேண்டும் என்பதல்ல. அதைவிட இப்பொழுது அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறது. மேலும் என்ன வகையிலே அபிவிருத்தி செய்யலாம் என்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

Vadavar Extension Canal

DEPUTY SPEAKER : As the hon. Member who gave notice of question No. 1490-I is not in his seat, the question and answer will be printed in the proceedings.

* 1490-I. Q.—SRI A. R. MARIMUTHU : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

வடவாறு எக்ஸ்டென்ஷன் வாய்க்காலின் கடைசியிலுள்ள நிலங்களுக்கு உள்ள தண்ணீர் சிரமத்தைப் போக்க என்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The additional vents to the head sluice of Vadavar river were constructed and brought to beneficial use during the last irrigation season itself (1959–60). There has been considerable improvement in the supply position in the tail end areas.

Development of a New Town near Kodambakkam

* 1490-J. Q.—SRI N. R. THIAGARAJAN : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை கோடம்பாக்கம் அருகே ஒரு புதுநகர் கட்டத் திட்டமிருக்கிறதா?

(இ) அதுபற்றிய விவரம் என்ன?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) A project for the development of a self-sufficient "Neighbourhood" in Kodambakkam area, called Kodambakkam Pudur, is under implementation.

(b) About 320 acres of lands have already been acquired and an equal extent of lands is proposed to be acquired. A composite layout for the area already acquired has been prepared, and development work has been taken up. About 1,200 slum families have already been rehabilitated there with moderate amenities.